# கடவுள் வாழ்த்து

1. *அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு*

**'அ'கரம் எனும் முதல் எழுத்தைப் போல்**
**ஆதி மூலமான கடவுளே**
**உலகத்து உயிர்களுக்கு முதலாவான் !**

2. *கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழாஅர் எனின்*

**முற்றும் அறிந்த இறைவனை**
**சற்றும் குறைவில்லாமல் வணங்காவிடில்**
**கற்ற மாபெரும் கல்வியினால்**
**பெற்ற பயன் தான் என்ன ?**

3. *மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடுவாழ் வார்*

**மலர் போன்ற மனதினிலே**
**மறைந்து, நிறைந்திருக்கும் இறைவனை**
**மனமுவந்து உணர்ந்தால்**
**மங்காப் புகழே இவ்வுலகில் !**

4. *வேண்டுதல்வேண் டாமை இலானடி சேர்ந்தார்க்கு*
*யாண்டும் இடும்பை இல*

**விருப்பு வெறுப்பின்றி, எங்கும்**
**வியாபித்திருக்கும் இறைவனின் திருவடிகளை**
**செருக்கின்றி வணங்கி நடக்கின்றவர்களுக்கு**
**வறுத்துகின்ற துன்பங்கள் என்றுமே இல்லையே !**

5. *இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்*
*பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு*

**இருவினையாகிய நன்மை–தீமைக்கு அப்பாற்பட்ட**
**இறைவன் எனும் பரம்பொருளை**
**இம்மையில் புரிந்து புகழ் பெற்றால்**
**இருளாம் அறியாமை அகலும் !**

6. *பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க*
*நெறிநின்றார் நீடுவாழ் வார்*

**ஐம்புலன்களினால் பிறக்கும் ஆசைகளை**
**அறவே ஒழித்த இறைவனின்**
**அடியொற்றி ஒழுக்க நெறியில் வாழ்பவன்**
**அழியாப் புகழோடு நீடூழி வாழ்வான் !**

7. *தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்*
*மனக்கவலை மாற்றல் அரிது*

**தனக்கு நிகரில்லாத இறைவனின்**
**தன்னிகரில்லா அடிகளை வணங்காதவர்கள்**
**தனக்கு வரும் மனக்கவலையையும்**
**தடுக்க இயலாது** *!*

8. *அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்*
*பிறவாழி நீத்தல் அரிது*

**அறக்கடலாம் இறைவன் எனும் அருளாளன்**
**அடிகளைப் பின்பற்றி நடக்காதவர்கள்**
**அதர்மத்தின் இருப்பிடமானப் பாவக் கடலைக் கடப்பது**
**அரிதிலும் அரிதே !**

9. *கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்*
*தாளை வணங்காத் தலை*

**ஈடற்ற ஆற்றலும் பண்பும்**
**ஈட்டுகின்ற குணங்களை உடைய இறைவனின்**
**ஈரடிகளை வணங்காதவர்கள்**
**ஈடு இல்லாத ஐம்பொறிகள் இருந்தும் இல்லாத நிலையே** *!*

10. *பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவன் அடிசேரா தார்*

**இறைவனின் திருவடிகளை வணங்கி**
**இயைந்து சரணடைந்தவரே**
**'பிறவி' எனும் பெருங்கடலைக் கடந்தவர் !**
**பிறர்; நீந்திக் கடக்காதவர்** *!!*